# தேவ வார்த்தைகளை விளக்கி இயேசு மக்களின் இருதயத்தில் உணர்ச்சியூட்டினார்

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே, எம்மா ஊர் செல்லும் வழியில் சீஷர்களுக்கு நிகழ்ந்தது போல, இயேசுவைப் பற்றி பண்டைய தீர்க்கத்தரிசிகள் கூறியதைக் குறித்து அறியும்போது குழந்தைகள் உள்ளங்களும் கிளர்ச்சி அடையும் படி உதவி செய்யும்."

குழந்தைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற **செயல்பாடுகளைத்** தெரிந்து கொள்க.

**லூக் 24:13-35** ல் உள்ள எரியும் இருதயங்கள் பற்றிய கதையை பெரிய குழந்தையோ அல்லது ஆசிரியரோ வாசிக்கலாம் அல்லது மனப்பாடமாகக் கூறலாம்.

இயேசு இரண்டு பேருக்கு வேதாகமம் தன்னைக் குறித்து முன்னுரைத்ததைக் கூறியது பற்றி **விளக்குக.** அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததால் அவர்கள் இருதயம் நெருப்பு போல எரிந்தது. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை தேவன் தமது பண்டைய தீர்த்தத்தரிசிகளுக்குக் கூறினார்.



**இந்தக் கேள்விகளைக் கேட்கவும்**

- முதன் முதலில் பார்த்த போது இந்த இரண்டு மனிதர்களும் இயேசுவை அடையாளம் தெரிந்து கொண்டார்களா? *(வச. 16)*
- அந்த இரண்டு மனிதர்களும் ஏன் மிகவும் சோகமாகக் காணப்பட்டனர்? *(வச. 20. இயேசு இறந்து போய்விட்டதால்)*
- அந்த மனிதர்கள் இயேசுவைப் பற்றி என்ன கூறினார்கள்? *(வச. 19-23).*
- அவர்களது துன்பத்தைப் பற்றி இயேசு என்ன கூறினார்? *(வச. 26).*
- அந்த இரண்டு மனிதர்களிடமும் இயேசு என்ன விளக்கிக் கூறினார்? *(வச. 27).*
- இறுதியாக எப்போது அவர்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொண்டார்கள்? *(வச. 30-31).*

**லூக். 24:13-35 லிருந்து, எம்மா ஊருக்கு நடந்து சென்று கொண்டு இருந்த சீஷர்களின் கதையை நாடகம் ஆக்குக.**

- சபை ஆராதனைத் தலைவரோடு பேசி இந்த நாடகத்தை அல்லது அதன் பகுதிகளை அரங்கேற்ற ஏற்பாடு செய்க.
- உங்கள் போதனை நேரத்தை ஒதுக்கி சிறுவர்கள் இந்த நாடகத்தை ஆயத்தமாக்க உதவி செய்க.
- பெரிய பிள்ளைகள் இதை ஆயத்தப்படுத்த சிறுவர்களுக்கு உதவி செய்யவும்.

- **இயேசு, சங்கீதக்காரர்கள்** (6 பேர் வரை), **கதை கூறுபவர்** (கதைச் சுருக்கம் கூறி, பிள்ளைகள நடிக்க ஞாபகப்படுத்துவர்) ஆகிய வேடங்களை பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ ஏற்கலாம். இந்த நாடகத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள 22 ஆம் சங்கீதத்தின் வசனங்களை ங்கீதக்காரர்கள் வாசிக்கலாம் அல்லது கூறலாம்.
- கிலேயோப்பா, நண்பன், சீஷர்கள் வேஷத்தை **சிறு குழந்தைகள்** ஏற்கலாம்.

**கதை கூறுபவர் :** லூக்கா 24:13-27 லிருந்து முதல் பகுதியைக் கூறவும் பின் சொல்லுவது “கிலேயோப்பா கூறுவதைக் கேளுங்கள்”

**கிலேயோப்பா :** (நடந்து கொண்டே கூடவருபவனிடம் கூறுவது) இயேசு இறந்து போய்விட்டதால் நான் மிகவும் துக்கமடைகிறேன்! தேவன் ஏன் அவரை சாகும்படி விட்டுவிட்டார்?

**இயேசு** : நண்பர்களே! நடந்து கொண்டே எதைப்பற்றி பேசுகிறீர்கள்?

**நண்பன்** : இயேசு இறந்து போய்விட்டார். அவர் மிகவும் வல்லமையான தீர்க்கதரிசி! அவர் யூதர்களின் இராஜா ஆவார் என்று நாங்கள் நினைத்தோம்! ஆனால் எங்கள் ஆட்சியாளர்கள் அவரைக் கொன்றுவிட்டனர். ஆனால், அவர் உயிரோடு இருப்பதாக சில பெண்கள் கூறினர்.

**இயேசு** : அவர் பாடுபட்டு மரிக்க வேண்டும். இதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா? வேத வசனம் அவரைப் பற்றி கூறுவது என்ன வென்று கேளுங்கள்.

**கதை கூறுபவர்:** தமது வேலைகளைப் பற்றி முன்னறிவித்த வசனங்களை தேவன் மேற்கோள் காட்டினார். அவர்களது இருதயம் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரிந்தது. இயேசுவின் சிலுவை மரணம் பற்றி சங்.22ல் தாவீது முன்னறிவித்தவைகளைக் கேளுங்கள்.

**சங்கீதக்காரர்கள்:**

“என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?
என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் என்னைப்
பரியாசம் பண்ணி உதட்டைப் பிதுக்கி தலையைத் துலுக்கி
‘கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்தானே
அவர் இவனை விடுவிக்கட்டும்
இவன் மேல் பிரியமாய் இருக்கிறாரே,
இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.
பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது.
என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.
என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணலாம்.
அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருகிறார்கள்.
என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு
என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்.”

**கதை கூறுபவர் :** லூக்கா 24:28-35 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறி பின் “கிலேயோப்பா கூறுவதைக் கேளுங்கள்”

**கிலேயேப்பா** : (இயேசுவிடம் பேசுகிறான்) “ நண்பரே! நேரமாகிவிட்டது! தொடர்ந்து நடந்து போக வேண்டாம்! எங்களோடு இங்கேயே தங்கி இருங்கள்.”

**இயேசு** : அப்பம் பிட்டுத் தருவேன். தேவனே இந்த உணவுக்காக நன்றி (ஒரு ரொட்டியைப் பிட்டுிலேயோப்பாவுக்கும் அவனது நண்பனுக்கும் கொடுப்பதாக பாவனை)

**கிலேயோப்பாவும் நண்பனும்:** சீஷர்களிடம் ஒடி சத்தம் இடுகிறார்கள், "அது அவரே! அவர் இயேசு தான்! அவரது சீஷர்களிடம் கூறுங்கள்!"

**கதைகூறுபவர்:** நாடகத்தை ஆயத்தம் செய்ய உதவியவர்களுக்கு நன்றி கூறுகிறார்.

**கேள்விகள்** : இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்ட கேள்விகளையம் பெரியவர்களிடத்தில் கேட்கவும்.

**கேளுங்கள்** : இயேசுவைப் பற்றியும் அவரது உயிர்த்தெழுதலைப் பற்றியும் கேட்கும் போது நம் உள்ளத்தை மகிழ்ச்சியால் தேவன் நிரப்பிய வேறு சமயங்களைப் பற்றிய உதாரணங்கள் யாவை? (சிறுவர்கள் உதாரணம் தரட்டும்).

**படம் வரைக** : இருதயத்துக்குள் நெருப்பு எரிவது போல் ஒரு படம் வரைக. குழந்தைகள் தாங்கள் வரைந்த படத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, இயேசு நமது இருதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புகிறார், ஏனெனில் அவர் சாகவில்லை! அவர் உயிரோடு இருக்கிறார், அவரது ஆவி என்றேன்றும் நமக்குள் வாழ்கிறது, என்று விளக்கவும்.



எசேக்கியேல் 36:25-26 ஐ **மனனம் செய்க** (சிறுவர்கள் 26ம் வசனம் மட்டும்).

**25** நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களை சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள்.

**26** உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளை இட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்தில் இருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, உமது உயிர்த்தெழு தலை நினைவு கூறும் போதெல்லாம் எங்கள் உள்ளம் மகிழ்ச்சியால் எரிகிறது. நீர் மரித்தவராக இருக்கவில்லை. நீர் உயிரோடு இருக்கிறீர். நீர் எங்களுக்குள் வாழ்ந்து எங்களுக்கு ஜீவனைத் தருகிறீர். நாங்கள் எங்கள் கண்களால் உம்மைப் பார்த்து எப்போதும் உம்மோடு வாழ விரும்புகிறோம். கர்த்தராகிய இயேசுவே சீக்கிரமாக வாரும்."

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net